NEW YORK
TAMIL ACADEMY

Mazhalai — ஆத்திச்சூடி (Aathichudi) 18 verses

Rules summary

- **Round 1:** Recite the 18 Aathichudi verses, in list order, from memory, max 4 minutes.
- **Tie-breaker:**
  - **Round A**: Students must recite Aathichudi verses starting with a letter the judges provide, max 1 minute.
  - **Round B**: Students choose and recite any number of verses with their meanings in Tamil, max 1 minute.
- *Students must recite with clarity, fluency and proper pronunciation to get full points.*
- *Students must provide the meaning in Tamil. The use of English words is permitted; however, it may result in a deduction of points.*
- *Points will be deducted for incomplete/partial recitals.*
- *Points will be deducted for each prompt or hint provided by the judges.*
- **Competition Date:** 18 Dec 2026
- **Mode of Competition:** Virtual *(The competition mode must be uniform per Nilai and conducted in a single format)*

ஆத்திச்சூடி (Aathichudi)

1. அறம் செய விரும்பு

பொருள் **(Tamil meaning):** தருமம் செய்ய ஆசைப்படு.

English: Have desire to do good deeds

2. ஆறுவது சினம்

பொருள் **(Tamil meaning):** கோபம் தணியத் தகுவதாம்.

English: Anger should be reduced / controlled

3. இயல்வது கரவேல்

பொருள் **(Tamil meaning):** கொடுக்க முடிந்த பொருளை இரப்பவர்க்கு ஒளியாமல் கொடு.

English: Help to your best possible extent

4. ஈவது விலக்கேல்

பொருள் **(Tamil meaning):** ஒருவர் மற்றொருவர்க்குக் கொடுப்பதைக் கொடுக்க வேண்டாமென்று தடுக்காதே.

English: Don't stop doing charity

5. உடையது விளம்பேல்

பொருள் **(Tamil meaning):** உன்னுடைய பொருளை அல்லது கல்வி முதலிய சிறப்பை நீயே புகழ்ந்து பேசவேண்டா.

English: Do not boast about your possession

6. ஊக்கமது கைவிடேல்

பொருள் **(Tamil meaning):** எத்தொழில் செய்யும்பொழுதும் மனவலிமை யினைக் கைவிடாதே.

English: Do not give up hope/self-confidence

7. எண் எழுத்து இகழேல்

பொருள் **(Tamil meaning):** கணிதத்தையும், இலக்கணத்தையும் இகழாமல் நன்றாகக் கற்றுக்கொள்.

English: Do not underestimate the power of learning

8. ஏற்பது இகழ்ச்சி

பொருள் **(Tamil meaning):** இரந்துண்டு வாழ்வது பழிப்பாகையால் ஒருவரிடத்தும் சென்று ஒன்றை வேண்டாதே.

English: To accept alms is a shameful act

9. ஐயம் இட்டு உண்

பொருள் **(Tamil meaning):** இரப்பவர்க்குப் பிச்சையிட்டுப் பின்பு உண்ணு.

English: Before eating, share food with those who need

10. ஒப்புரவு ஒழுகு

பொருள் **(Tamil meaning):** உலகத்தோடு பொருந்த நடந்துகொள்.

English: Act with high moral standards

11. ஓதுவது ஒழியேல்

பொருள் **(Tamil meaning):** அறிவு தரும் நல்ல நூல்களை எப்பொழுதும் படித்துக்கொண்டிரு.

English: Never stop learning

12. ஒளவியம் பேசேல்

பொருள் **(Tamil meaning):** ஒருவரிடத்தும் பொறாமைகொண்டு பேசாதே.

English: Never envy / talk bad about others

13. அஃகம் சுருக்கேல்

பொருள் **(Tamil meaning):** மிகுந்த இலாபத்துக்கு ஆசைப்பட்டுத் தானியங்களைக் குறைத்து விற்காதே.

English: Do not be stingy in selling food grains

14. கண்டொன்று சொல்லேல்

பொருள் **(Tamil meaning):** பார்க்காததைப் பார்க்காதவற்றைப் பார்த்ததாகப் பேசாதே

English: Tell exactly what you saw

15. ஙப் போல் வளை

பொருள் **(Tamil meaning):** பணிவுடன் வளைந்து கொடு; பெரியவர்கள் மற்றும் சான்றோர்களிடம் அடக்கத்துடனும் பணிவுடனும் நடந்துகொள்.
இங்கு "ங" என்ற எழுத்தின் வடிவம் வளைந்திருப்பதைப் போல, மனிதனும் பணிவுடன் இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

English: Preserve the bonds

16. சனி நீராடு

பொருள் **(Tamil meaning):** சனி(குளிர்ந்த) நீராடு.

English: shower with clean cold water

17. ஞயம்பட உரை

பொருள் **(Tamil meaning):** கேட்பவருக்கு இன்பம் உண்டாகும் படி இனிமையாகப் பேசு.

English: Speak nice and sweet

18. இடம்பட வீடு எடேல்

பொருள் **(Tamil meaning):** உன் தேவைக்கு மேல் வீட்டை பெரிதாகக் கட்டாதே.

English: Build your house meeting your needs

ALL THE VERY BEST!!!!